வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 84 of 2017

வழக்கு சாட்சி - PW5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.முனியப்பன் | தொழில் | : | உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| தந்தை பெயர் | : | குருசாமி | வயது | : | |
| கிராமம் | : | நடுபாளையம் | | | |
| தாலுக்கா | : | கோயம்புத்தூர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 17.09.2025.

எதிரி ஆஜர் இல்லை.

**முதல் விசாரணை :**

1)நான் தற்போது உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போத மேற்கண்ட முகவரியில் குடியிருந்துகொண்டு வருகிறேன். கடந்த 01.02.2017 ஆம் தேதி காலை 5.15 மணிக்கு சக்திவேல் த/பெ. பாலசுப்பிரமணியம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று அவிநாசிபாளையம் காவல் நிலைய குற்ற எண் 47/2017 சட்டப்பிரவு 279,304(A) இதசவாக முதல்தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அசல் முதல் தகவல்அறிக்கையுடன் வாதியின் புாரினை இனைத்து நீதிமன்ற நடுவருக்கு அனுப்பி வைத்தேன் புலன் விசாரணைக்காக ஒரு நகலை மங்கலம் காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளர் திரு. வேல்முருகன் அவர்கள் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ. 6 ஆகும்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

1) இந்த வழக்கு சம்மந்தமாக புகார் தாரர் புகார் தருவதற்கு முன் எந்த தகவலும் கிடைக்கவில்லை என்றால் போன் மூலமாக தகவல் கிடைத்தது. போன் மூலம் யார் தகவல்

சொன்னார்கள் என்றால் ஞாபகம் இல்லை. காவல் நிலையத்திற்கு போன் செய்து ஒரு வருக்கு விபத்து ஏற்பட்டு இறந்திருப்பதாக சொன்னார்கள். இந்த விவரங்களை ஆய்வாளர் விசாரணையில் குறிப்பிட்டு சொன்னேனா என்றால் இல்லை. புகார்தாரர் புகாரில் விபத்து சம்மந்தமாக எப்படி விபத்து நேரிட்டது விபத்து நடந்த வாகனம் நேருக்கு நேராக மோதியதா அல்லது பக்கவாட்டில் மேதியதா என்பதை குறிப்பிட்டு சொன்னாரா என்றால் சரிதான். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் காளம் எண் 15 ல் குறிப்பிட்டுள்ளது போல் 01.02.2017 ஆம் தேதி நீதிமன்றத்திற்கு முதல் தகவல்அறிக்கையை அனுப்பி வைக்க வில்லை என்றால் சரியல்ல. இரண்டு நாள் காலதாமதமாக 03.02.2017 ஆம் தேதி நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேனா என்றால் சரிதான். நான் சொன்ன நாள் சொன்ன விதத்தில் புகார் பெற்று முதல் தகவல் அறிக்கை பதியவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2025.09.17 18:46:03 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.